[1973 நவம்பர் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து என்னுடைய அறையிலே பேசிக்கொள்ளலாம். அவையிலே பேச வேண்டியதில்லை.

2. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

தாமிர பட்டயங்கள் வழங்கல்

*449. வினா.—திரு. வை பாலசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுதந்திர தினத்தன்று, சுதந்திர போராட்ட வீரர்களுக்குச் சென்னையில் தாமிர பட்டயம் வழங்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு பேருக்குத் தாமிர பட்டயம் வழங்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(ஆ) சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த 273 பேருக்கும் இதர மாவட்டங்களைச் சேர்ந்த 30 பேருக்கும் சென்னை நகரத்தில் தமிழ்நாடு அரசின் பட்டயம் வழங்கப்பட்டது. மேலும், சென்னை மாவட்டம் உட்பட, மாநிலம் முழுவதிலும் 4,749 பேருக்குத் தமிழ்நாடு அரசின் பட்டயம் வழங்கப்பட்டது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட பட்டயம் எங்கே செய்யப்பட்டது நம்முடைய மாநிலத்திலா? அல்லது வேறு மாநிலத்திலா? அதனுடைய விலை என்ன? அந்தப் பட்டயத்தில் எந்த மொழியில் வார்த்தைகள் இருந்தன என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே இந்தப் பட்டயத்தைத் தயாரித்தவர்கள் நம்முடைய தமிழ் நாட்டிலுள்ள 'டான்ஸி' நிறுவனத்தார் ஆவார்கள். அவர்கள் தயாரித்த இந்தப் பட்டயம் ஒவ்வொன்றின் விலை சுமார் 65 ரூபாயாகும். 6.5 இலட்ச ரூபாய் இதற்கு ஆன மொத்தச் செலவாகும். இதில் நம்முடைய மொழியிலேயே தமிழிலேயேதான் எழுதப்பட்டிருக்கிறது.

1973 நவம்பர் 28]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இன்னும் தாமிர பட்டயம் கொடுப்பதற்கு விடப்பட்ட கேஸ்கள் இருக்கின்றனவா? அப்படியானுல், அவற்றைப் புனர் பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: தலைவர் அவர்களே, மத்திய அரசு சில தகுதிகளை வரையறுத்து அவர்களுக்குத்தான் தாமிர பட்டயங்கள் அளிக்கப்படும் என்று கூறியிருந்தது. மேலவையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், மத்திய அரசு குறிப்பிட்டுள்ள தகுதிகள் ஆறு மாத காலம் சிறையில் இருக்க வேண்டுமென்று இருக்கிறது, அதைத் தளர்த்தும்படி மத்திய அரசுக்கு எழுதிக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். நான் அதற்கு உறுதியளித்து, அவ்வாறு மத்திய அரசு ஆறு மாத தண்டனைக் காலம் என்பதைக் குறைத்து, இன்னும் குறைவான தண்டனை பெற்றிருந்தாலும் அவர்களையும் நாட்டு விடுதலை வீரர்களின் பட்டியலில் சேர்த்து அவர்களையும் அரசு கௌரவிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பாக மத்திய அரசுக்கு எழுதப்பட்டது. ஆனுல், மத்திய அரசு அந்த மாநில அரசே அப்படிப்பட்டவர்களுக்கு இரண்டு மாத காலம், மூன்றுமாதகாலம் சிறை சென்றவர்களுக்கு—பட்டயங்களை வழங்குவது என்று முடிவெடுத்து, பத்தாயிரம் பட்டயங்கள் தயாரித்து வைத்திருந்தது, இதுவரை 4,749 பேருக்கு அளிக்கப் பட்டிருக்கின்றன. மேலும் விண்ணப்பித்துக் கொள்வார்களானுல், அந்த விவரங்களை அறிந்து அவர்களுக்கும் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே. மத்திய அரசு தருகிற அந்தப் பட்டயத்திற்கும் மாநில அரசு தருகிற பட்டயத்திற்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? தகுதியின் அடிப்படையைச் சொன்னுர்கள். அந்தப் பட்டயம் மாநில அரசின் சார்பிலோ அல்லது மத்திய அரசின் சார்பிலோ—நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் யாருக்காவது அளிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: சட்ட மன்ற உறுப்பினருக்கு அளிக்கப்பட்டதா என்பது எனக்கு நினைவு இல்லை. மத்திய அரசு வழங்குகிற பட்டயத்திற்கும் தமிழக அரசு வழங்குகிற பட்டயத்திற்கும் என்ன வேறுபாடு? என்று கேட்டார்கள். இது புரியும். அவ்வளவுதான்! (சிரிப்பு)

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, இந்தப் பட்டயம் வழங்கப்பட்டவர்களில் யாராவது அது வேண்டாம் என்று மறுத்திருக்கிறார்களா? அப்படியிருந்தால், அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஓரிருவர் அந்த விழாவிற்கு வராமலிருந்திருப்பார்கள். யாரும் வேண்டாம் என்று மறுத்ததாகத் தெரியவில்லை.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, இப்பொழுது தமிழக அரசு வழங்கும் இந்தப் பட்டயங்களைப்போல் 1967-க்கு முன்பு ஏதாவது பட்டயம் வழங்கப்பட்டதா? 1967-க்கு முன்பு எத்தனை பேருக்கு மானியம் வழங்கப்பட்டது? 1967-க்குப் பிறகு எத்தனை பேருக்கு மானியம் வழங்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பட்டயங்கள் 1967-க்கு முன்பு வழங்கப்படவில்லை. 1967-க்கு முன்பு சுதந்திர வெள்ளி விழா நடைபெறவில்லை. ஆகவே, பட்டயங்கள் வழங்கப்படவில்லை. சுதந்திர வெள்ளி விழாவை முன்னிட்டு இந்தப் பட்டயங்கள் மத்திய அரசாலும் மாநில அரசாலும் வழங்கப்பட்டன. 1967-க்கு முன்பு மானியம் வழங்கப்பட்டதா என்று கேட்டார்கள். அடுத்து வரும் கேள்வியில் அதன் தொடர்பாகக் கேட்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இத்தகைய உதவி செய்வதாக நமது மாநில அரசு வாக்குறுதி தந்திருக்கிறது. அதைப்பற்றி அரசு ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா இல்லையானால், விரைவில் முடிவு எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும், எப்படி விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களுக்கு கௌரவம் அளித்ததோ அதைப்போல இவர்களுக்கும் கௌரவம் அளிக்கும் வகையில் மானியம் வழங்க வேண்டுமென்ற ஒரு முடிவினை அரசு எடுத்திருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS